# முழு ஆற்றலுடன் - சென்னைக்கு மீண்டும் வருகிறது ‘ஃபோர்டு’ நிறுவனம்!

## வலைதளப் பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!



சென்னை, நவ. 1- ஃபோர்டு நிறுவனத்தால் ரூ.3250 கோடி முதலீட்டில் 600 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் மறைமலை நகரில், அடுத்த தலைமுறை வாகன இன்ஜின் (NextGen Engine) உற்பத்தி செய்வதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது குறித்து

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

“ஃபோர்டு நிறுவனம் 3,250 கோடி ரூபாய் முதலீட்டில் அடுத்த தலைமுறை வாகன இஞ்சின் உற்பத்தி அலகைத் தனது மறைமலை நகர் தொழிற்சாலையில் அமைக்கவுள்ளது. மிக நீண்ட, நம்பிக்கை கொண்ட உறவினைப் புதுப்பிக்கும் வகையில் இந்த ஆற்றல்மிகு மீள்வருகை அமைந்துள்ளது. இந்த முக்கிய முதலீட்டினால் 600 நேரடி வேலைவாய்ப்புகள் உருவாவதோடு, தமிழ்நாட்டின் ஆட்டோ மொபைல் உதிரி பாகச் சூழலும் வலுவடையும்.

அடுத்த தலைமுறை இஞ்சின்களை உற்பத்தி செய்ய இந்தியாவின் ஆட்டோ மொபைல் தலைநகரத்தைத் தேர்வு செய்துள்ள ஃபோர்டின் முடிவானது, தமிழ்நாட்டின் தொழில் துறை வலிமைக்கும் உலக உற்பத்திச் சங்கிலியில் நமது தவிர்க்க முடியாத இடத்துக்கும் மற்றுமொரு சான்றாக உள்ளது!”

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# ஃபோர்டு நிறுவனம் ரூ.3250 கோடியில் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

**முதல் பக்கத் தொடர்ச்சி**

அப்போது ஃபோர்டு நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் உறுதியளித்தபடி, ஃபோர்டு நிறுவனம், ரூ.3250 கோடி முதலீட்டில் 600 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில், வாகன இன்ஜின் உற்பத்தித் திட்டத்தை மீண்டும் தொடங்க உள்ளது. அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்றைய தினம், முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, ஃபோர்டு நிறுனத்தின் உலகளாவிய இயக்குநர் மார்ட்டின் எவரிட், துணைத் தலைவர்

மாத்யூ கோடிலூஸ்கி, தாய்லாந்து திட்டத்தின் மேலாண்மை இயக்குநர் சைமோநேட்டா வெர்டி, இயக்குநர் (உற்பத்தி) தீரஜ் தீக்சித், இயக்குநர் ஸ்ரீபாத் பட் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மாநிலங்களுக்கு இடையிலான

# எல்லை தயார் நிலை - பீகார் தேர்தலில் கடுமையான கண்காணிப்பு குறித்து அறிவுறுத்தல்!

## இந்திய தேர்தல் ஆணையம் அறிவிப்பு!

புதுடெல்லி, நவ.1

இந்தியத் தேர்தல் ஆணையம் (ECI) மாநிலங்களுக்கு இடையிலான எல்லை தயார் நிலை குறித்து மதிப்பாய்வு செய்தது; அமைதியான மற்றும் தூண்டுதல் இல்லாத பீகார் சட்டமன்றத் தேர்தல் 2025 ஐ உறுதிசெய்ய கடுமையான கண்காணிப்பை மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளது.

அது பற்றிய விவரம் வருமாறு:-

இந்தியத் தேர்தல் ஆணையமானது (ECI) இன்று பீகார் மாநிலத்தின் மாநிலங்களுக்கு இடையிலான எல்லை தொடர்பான பிரச்சினைகள் குறித்த ஒருங்கிணைப்பு கூட்டத்தை பீகார், ஜார்கண்ட், உத்தரப்பிரதேசம் மற்றும் மேற்குவங்க மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள், காவல் துறை தலைமை இயக்கநர் (DGPs), முதன்மைச் செயலாளர்கள் மற்றும் உள்துறை அமைச்சகம், இரயில்வே அமைச்சகம் மற்றும் பல்வேறு அமலாக்க அமைப்புகளின் அதிகாரிகளுடன் நடத்தியது.

தலைமைத் தேர்தல் ஆணையர் (CEC) ஞானேஷ் குமார், தேர்தல் ஆணையர்களான டாக்டர். சுக்பீர் சிங் சந்து மற்றும் டாக்டர். விவேக் ஜோஷி ஆகியோருடன் இணைந்து, மனிதர்கள், பொருட்கள் மற்றும் பணத்தின் நகர்வை, குறிப்பாக ஆயுதங்கள், சமூக விரோதிகள், மதுபானம், போதைப்பொருள் மற்றும் இலவசப் பொருட்கள் ஆகியவற்றின் நடமாட்டத்தை கண்காணிப்பதற்காக பீகார் மற்றும் அதன் அண்டை மாநிலங்களில் சட்டம் மற்றும் ஒழுங்கு நிலையை மதிப்பாய்வு செய்தனர். ஆணையம் நடவடிக்கைகளை பரிசீலித்தது. மேலும் பீகாரின் எல்லை மாவட்டங்களில் அமைதி மற்றும் ஒழுங்கை பேணுவதற்காக எல்லைகளை மூடுவது குறித்து சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது.

இக்கூட்டத்தின் போது தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், சுதந்திரமான, நியாயமான, அமைதியான மற்றும் தூண்டுதல் இல்லாத தேர்தல்களை உறுதி செய்வதில் ஆணையத்தின் உறுதியை வலியுறுத்தினார். தேர்தல் நடைமுறையின் ஒருமைப்பாட்டை நிலை நிறுத்த அனைத்து பங்குதாரர்களும் ஒருமித்துப் பணியாற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

வாக்காளர் வசதிக்கான வழிகாட்டுதல்களை பின்பற்றுவது இணங்குவது குறித்து ஆணையம் மதிப்பாய்வு செய்து, வாக்களிக்கும் நாளில் வாக்காளர்களுக்கு சுமூகமான மற்றும் இனிமையான அனுபவம் கிடைக்க உறுதிசெய்வதை ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. தலைமைச் செயலாளர்கள், காவல் துறை தலைமை இயக்குநர்கள் மற்றும் மத்திய முகமைகளின் தலைவர்களுக்கு, அமைதியான மற்றும் தூண்டுதல் இல்லாத 2025 பீகார் சட்டமன்ற பொது தேர்தலை உறுதி செய்ய அறிவுறுத்தியது.

ஜார்கண்ட், உத்தரப்பிரதேசம் மற்றும் மேற்குவங்கத்தின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் காவல் துறை தலைவர்கள், சசஸ்த்ர சீமா பாலின் (SSB) காவல் துறைத் தலைவர் ஆகியோர் பீகாரை ஒட்டிய எல்லைப் பகுதிகளில் தீவிரமான கண்காணிப்பை மேற்கொண்டு, மாநிலங்களுக்கு இடையிலான சோதனைச் சாவடிகளில் கூடுதல் சோதனைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

மத்திய அமைப்புகள், அதாவது போதைப்பொருள் கட்டுப்பாட்டு (NCB), வருமான வரித்துறை, மத்திய சரக்கு மற்றும் சேவை வரித்துறை (CGST) மற்றும் வருவாய் நுண்ணறிவு இயக்குநகம் (DRI) ஆகியவை தேர்தல் காலம் வரை கண்காணிப்பை தீவிரப்படுத்தி, செயற்பாட்டு நுண்ணறிவின் அடிப்படையில் அதிகபட்ச பறிமுதல்களை அறிவுறுத்துமாறு உத்தரவிடப்பட்டன.

இவ்வாறு இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

### தி.மு.க. மாணவர் அணி

# மாவட்ட, மாநகர அமைப்பாளர்- துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

## மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர் **கழகத் தலைவர்** அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாடு துணை முதலமைச்சர் **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் வழிகாட்டுதலின் பேரில், தி.மு.க. மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் கூட்டம், வருகிற 7.11.2025 வெள்ளியன்று காலை 10.30 மணி அளவில், சேலம், “தீர்த்தமலை திருமண மண்டபத்தில்”, சுற்றுலாத் துறை அமைச்சரும் – சேலம் மத்திய மாவட்டச் செயலாளருமான **ஆர்.இராஜேந்திரன்**, தலைமையில், சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் **எஸ்.ஆர்.சிவலிங்கம்**, எம்.பி., – சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் **டி.எம்.செல்வகணபதி**, எம்.பி., ஆகியோர் முன்னிலையில், மாநில மாணவர் அணி துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், சேலம் இரா. தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், தமிழ் கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த், வி.ஜி.கோகுல், திருமதி பூர்ணசங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ.வீரமணி, ஜெ.இராமகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்றிட நடைபெறும்.

அதுபோது மாவட்ட, மாநகர அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் மற்றும் புதுச்சேரி மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்** : 1) துணை முதலமைச்சர் – கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்களின் பிறந்த நாள்; 2) கல்லூரிகளில் சேர்க்கப்பட்டுள்ள “தமிழ் மாணவர் மன்ற” உறுப்பினர் படிவம் ஒப்படைத்தல், 3) மாணவர் அணியின் ஆக்கப் பணிகள் – குறித்து.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை – 18.
நாள்: 31.10.2025.

**இரா. ராஜீவ்காந்தி**
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி.

### S.I.R. குறித்து – கழகத்


# தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகளுக்கு பயிற்சிக் கூட்டம்!

## அணியின் செயலாளர் – அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா தலைமையில் நடைபெற்றது!

சென்னை, நவ.1-

என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடி' என்ற இலக்குடன் கழகத் தலைவர்-முதலமைச்சர் அவர்கள் மாமல்லபுரத்தில் நடத்திய பயிற்சி முகாம் விவரங்களைக் கழக தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகளுக்குத் தெளிவாக விளக்கிடும் வகையில் அணிச் செயலாளர் தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் காணொலிக் கூட்டம் நடைபெற்றது.

இதில் கழகத் தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர், மாநில துணைச் செயலாளர்கள், மண்டல பொறுப்பாளர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஓரணியில் தமிழ்நாடு (OTN AC) ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டு BDAக்களுக்கு அளிக்க வேண்டிய பயிற்சிகுறித்து தெரிந்து கொண்டனர். SIR பற்றியும் விரிவான விளக்கம் அளிக்கப்பட்டது. தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ள தொகுதிப் பார்வையாளர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டு தங்கள் ஆலோசனைகளை வழங்கினார்கள். ஒவ்வொருவரும் தங்கள்




வாக்குச்சாவடியை வெற்றி வாக்குச்சாவடியாக்குவதற்கு இந்தக் காணொலி பயிற்சி உறுதுணையாக அமைந்தது.

### இன்று நடைபெறுகிறது

# இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆர்.காந்தி அறிவிப்பு!

இராணிப்பேட்டை, நவ. 1-

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க, அவசர செயற்குழுக் கூட்டம் இன்று (01.11.2025 - சனிக்கிழமை) மாலை 4.00 மணி அளவில் மாவட்ட அவைத் தலைவர் A.K.சுந்தரமூர்த்தி தலைமையில் மாவட்ட தி.மு.க அலுவலகம் (பாரதி நகர், சிப்காட்டில்) நடைபெறுகிறது.



எனவே இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

நவம்பர் 3, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நமது மாவட்டம் வருகை குறித்து

வாக்காளர் சிறப்பு சுருக்க திருத்தம் (S.I.R) பணிகள் குறித்து

கழக ஆக்கப் பணிகள் குறித்து.

மேற்கண்டவாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி அறிவித்துள்ளார்.

### வேண்டுமென்றே தவறான தகவல்களைக் கூறுகிறார் எடப்பாடி பழனிசாமி!

# கழக ஆட்சியில் நெல் கொள்முதல் - கடந்த ஆட்சியைவிட மூன்று மடங்கு அதிகம்!

## உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேட்டி!

திண்டுக்கல், நவ. 1 -

எடப்பாடி பழனிசாமி வேண்டுமென்றே தவறான தகவல்களை கூறுகிறார்

கழக ஆட்சியில் அதிகபட்ச நெல் கொள்முதல் கடந்தாண்டை விட மூன்று மடங்கு நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்று உணவுத் துறை அமைச்சர் அர.சக்கரபாணி கூறினார்.

உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி திண்டுக்கல் லில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

எடப்பாடி பழனிசாமி நெல் கொள்முதல் தொடர்பாகதவறான தகவல்களை கூறி வருகிறார். அ.தி.மு.க.வின் 10 ஆண்டு கால ஆட்சியில் ஒரு கோடியே 79 லட்சத்து 81 ஆயிரத்து 152 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. அதேபோல் குறைந்தபட்ச ஆதார விலையாக ரூ.27 ஆயிரத்து 972 கோடியே 21 லட்சம் வழங்கப்பட்டது. தமிழக அரசின் ஊக்கத்தொகையாக ரூ.1,145 கோடியே 38 லட்சம் வழங்கப்பட்டு இருக்கிறது.

ஆனால் கழக அரசின் 54 மாத ஆட்சியில் ஒருகோடியே 96 லட்சத்து 37 ஆயிரத்து 499 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு இருக்கிறது. மேலும் குறைந்தபட்ச ஆதார விலையாக ரூ.41 ஆயிரத்து 777 கோடியே 68 லட்சம் வழங்கப்பட்டு உள்ளது. அதேபோல் தமிழக அரசின் ஊக்கத்தொகை யாக ரூ.2 ஆயிரத்து 2 கோடியே 76 லட்சம் வழங்கப்பட்டு இருக்கிறது. எனவே தி.மு.க. ஆட்சியில் தான் அதிகபட்சமாக நெல் கொள்முதல் செய்து இருக்கிறோம்.

ஆண்டை விட இந்த ஆண்டு 3 மடங்கு அதிகமான நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதற்காக 13 மாவட்டங்களில் 127 நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு இடத்தி லும் தலா ஆயிரம் மூட்டை கள் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. இது தவிர தேவைப்படும் பகுதியிலும் நெல் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தினமும் 35 ஆயிரம் டன் நெல் லாரிகள் மூலம் வெளி மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுகிறது. இதற்காக 4 ஆயிரம் லாரிகள் இயக்கப்படுகின்றன.

தி.மு.க. ஆட்சியில் நெலுக்கான ஊக்கத்தொகையை சிறிய ரகத்துக்கு ரூ.70ல் இருந்து ரூ.156 ஆகவும், பொது ரகம் ரூ.50ல் இருந்து 131 ஆகவும் உயர்த்தி இருக்கிறோம். அதேபோல் குறைந்தபட்ச / ஆதார விலையாக குவிண்டாலுக்கு சிறிய ரகத்துக்கு ரூ.2,545ம், பொது ரகத்துக்கு ரூ.2,500ம் தருகிறோம்.

மேலும் நெல் கொள்முதல் ஈரப்பதம் அளவு 17 சதவீதமாக உள்ளது. அதை 22 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்று மத்திய அரசுக்கு கோரிக்கை வைக்கப்பட்டது. அதன்பேரில் அதிகாரிகள் குழுவினர் நேரில் வந்து ஆய்வு செய்துவிட்டு சென்று உள்ளனர்.

**மத்திய மந்திரி வருகை**

மேலும் செறிவூட்டப்பட்ட அரிசி தொடர்பாக மத்திய அரசு ஆகஸ்டு 18 ந்தேதியே அனுமதி வழங்கியதாக எடப் பாடி பழனிசாமி கூறுகிறார். இதுவரை அனுமதி கிடைக்கவில்லை. எனவே மத்திய மந்திரி பிரகலாத்ஜோஷியிடம் இன்று (நேற்று) நெல் கொள்முதல் ஈரப்பதத்தை உயர்த்தக் கோரியும், செறிவூட்டப்பட்ட அரிசியை சோதனை செய்து தரச்சான்று விரைவாக வழங்கக்கோரியும் வலியுறுத்தி இருக்கிறேன்.

அதோடு எடப்பாடி பழனிசாமி தஞ்சை சென்ற போது ஒரு பெண்மணி தனது நெல்மணிகள் முளைத்துவிட்டதாக கூறினார். அந்த பெண்மணி நடவுசெய்த நெற்பயிர் இது வரை அறுவடை செய்ய வில்லை என்பது தெரியவந்தது.

இவ்வாறு அவர் கூறினார்.

# தஞ்சை தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர்- தி.பழனிவேல் அறிவிப்பு!

தஞ்சை, நவ.1-

தஞ்சை தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் தி. பழனிவேல் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

தஞ்சை தெற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் இன்று (01.11.2025-சனிக்கிழமை), காலை 9 மணியளவில் பட்டுக்கோட்டை ஏஏஏ ஹாலில் தஞ்சை தெற்கு மாவட்ட



கழக அவைத்தலைவர் சுப. சேகர் தலைமையில் நடைபெற உள்ளது.

எனவே இக்கூட்டத்தில் தொகுதிக்குட்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதிப் பொறுப்பாளர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள்,மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர,பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுகிறேன்.

பொருள் :

கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.